DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -9

| | | |
|---|---|---|
| Name | : திரு. சந்திரமூர்த்தி (எ) பழனிவேல் | Caste: |
| Father's Name: | திரு. சுந்தரகவுண்டர் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023.**

**முதல் விசாரணை**

நான் வீரபாண்டி கிராமம், ஒட்டமரக்காடு என்ற இடத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இறந்துபோன விஜயனை தெரியும். அவர் எனது சித்தப்பா மகன். அவர் எனது பக்கத்துக்காட்டை சேர்ந்தவர். ஆஜர் 1 ஆம் எதிரி சுந்தரமூர்த்தியை மட்டும் தெரியும் மற்ற எதிரிகளை தெரியாது. 1 ஆம் எதிரி எனது பங்காளி அண்ணனின் மகன்.

விஜயன் கொலை செய்யப்படுவதற்கு 2, 3 தினங்களுக்கு முன்பாக நான் விஜயனின் வீட்டிற்கு வழக்கம்போல் பால்கொண்டு சென்றேன். அப்போது விஜயன் அவரது இடத்தில் புதிய வீடு கட்டிக்கொண்டிருந்தார். அப்போது விஜயன் என்னிடம் 1 ஆம் எதிரி சுந்தரமூர்த்தி தான் ரோட்டில் செல்லும் போது தன்னை நின்று முரைத்துவிட்டு செல்லுகிறார் என்றும், 2 முறை அதுபோன்று நடந்துவிட்டது என்றும் என்னிடம் சொன்னார். என்ன காரணத்தினால் 1 ஆம் எதிரி அவ்வாறு செய்கிறார்

என்று எனக்கு தெரியவில்லை என்று சொல்லிவிட்டு நான் போய்விட்டேன்.

2 தினங்கள் கழித்து விஜயன் கொலை செய்யப்பட்டுவிட்டார். அன்றைய தினம் காலை 6, 7 மணி சுமாருக்கு நான் மார்கெட்டிற்கு காய் வாங்குவதற்காக போனோன். அப்போது விஜயன் கொலை செய்யப்பட்ட இடத்தில் கும்பலாக இருந்தார்கள். நான் என்வென்று விசாரித்தபோது விஜயனை யாரோ கழுத்தை அறுத்து கொன்றுவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் விஜயனின் உடலை பார்த்து உறுதி செய்தற்கு பின்னர் விஜயனின் அக்காக்கள் கலாவதி, ஜெயலட்சுமி ஆகியேர்களுக்கு போன் செய்து தகவல் சொன்னேன்.

ஒரு மாதத்திற்கு பிறகு 1ஆம் எதிரி கோர்டில் ஆஜராகிவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். அதன்பின்னர் SI வந்து என்னை விசாரித்தபோது மேற்கண்ட சங்கதியை சொன்னேன். போலிசார் அதனை பதிவு செய்து கொண்டார்கள்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

02.09.2014 அன்று போலிசர் என்னை விசாரிக்கவில்லை. 16.11.2014 அன்று தான் போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னை ஒருமுறை தான் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்த போது விஜயன் என்னிடம் சுந்தரமூர்த்தி அவரை முரைத்துக்கொண்டே போவதாக சொன்ன சங்கதியை தெரிவித்தேன். விஜயன் என்னிடம் சுந்தரமூர்த்தி அவரை முரைத்துக்கொண்டே போவதாக சொன்னார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அப்படி எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

நான் போலிசார் விசாரணையில் அப்படி ஒரு சங்கதியை சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசர் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.